PTJ1-3-TA

# உயிர்த்தெழுதலுக்கான ஆதாரங்கள் - நிகழ்ச்சி 3

**அறிவிப்பாளர்:** கேள்வி? இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா?

அது உண்மையா கட்டுகதையா?

அது அர்த்தமுடையதா?

ஆதற்கு ஆதாரம் என்ன?

உங்களிடம் இந்த கேள்விகளை கேட்கும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு உங்கள் பதில் என்ன?

"இயேசு உயிர்தெழுந்தார் என்பது கட்டுகதை தானே?"

அவரை சிலுவையிலிருந்து இறக்கியபோது அவர் மரித்திருந்தார் என்று எப்படி தெரியும்? அவருடைய மரணம் அடக்கத்திற்கு பிறகு உயிர்த்த இயேசு 500க்கும் மேற்பட்டோருக்கு தரிசனமானார் என்பது கற்பனையா அல்லது தத்ரூபமாக தோன்றினாரா?

இன்று எனது விருந்தினர் இதற்கான பதில் தருகிறார் முன்னாள் நாத்திகர், கிறிஸ்தவராக மாறியவர், ஆச. லீ ஸ்ட்ராபெல், முன்னாள் பதக்கம் வென்ற சிக்காகோ டிரிபூனின் பதிப்பாசிரியர், அதோடு நியூயார்க் டைம்சின் சிறந்த விற்பனையான 20 புத்தகங்களின் ஆசிரியர். இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்த இந்த விசேஷித்த பதிப்பை பார்ப்பதற்கு உங்களை வரவேற்கிறோம் இது ஜான் ஆன்கர்பகின் நிகழ்ச்சி.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நமது விருந்தினர் லீ ஸ்டிராபெல், வெற்றிகரமாக நாடுமுழுவதிலும் உள்ள புத்தக நிலையங்களில் விற்பனையாகும் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார், கிறிஸ்துவைபற்றிய உண்மை, விசுவாசத்தை பற்றிய உண்மை, சிருஷ்டிகரைக் குறித்த உண்மை அதோடு விரைவில் வெளிவர இருக்கும் மெய்யான கிறிஸ்து. லீ முன்னாள் பதிப்பாசிரியர், சட்டபதிப்பாசிரியர், 13 வருடங்களாக சிக்காகோ டிரிபூனிற்காக, பணியாற்றி பதக்கம் பெற்றவர். அந்த சமயத்தில், முழு, நாத்திகனாக இருந்தார். தேவனை நம்பவில்லை, அது கற்பனையாகவோ கட்டுகதையாக, இருந்தாலும், தேவையில்லை என்றார். ஆனால் சந்தர்ப சூழ்நிலைகள் அவரை ஆதாரங்களை சேகரிக்கும் வழியில் விட்டது. இயேசுவினுடைய கூற்றுகளை ஆராய்ச்சி செய்து அறிந்துகொண்டு அதற்கு பிரதியுத்தரம் கொடுப்பதற்கு 2 வருடங்கள் சென்றது. அந்த ஆதாரங்கள் அவரை இயேசுவை விசுவாசிக்க வைத்தது. இன்றைக்கு அந்த ஆதாரங்களைக் குறித்து பேச இருக்கிறோம். நீங்கள் கேட்கும்படி விரும்புகிறேன்.

சரி, சமீபத்தில், நாம் அறிந்ததுபோல, உயிர்த்தெழுதலைப் பற்றி பல தாக்குதல்கள் நடக்கிறது. எனவே லீ முதன் முதலில் 1981ல் இதை அறிந்தபோது இருந்த நிலையை ஞாபகப்படுத்தி ஒரு புத்தகத்தை எழுதயிருக்கிறார் அன்றைக்கு அவர் அறிந்து கொண்டவை இன்றைக்கு இந்த தாக்குதல்களின் மத்தியில் உண்மையாக இருக்கிறதா?

சரி, லீ, எப்படிபட்ட தாக்கங்கள் உண்டாகிறது என்பதை நான் சொல்கிறேன் நீங்கள் அதற்கு பதில் சொல்லுங்கள், அதைக் குறித்து கொஞ்சம் பார்க்கலாம், அதன் பிறகு அதை விளக்கமாக பார்க்கலாம். பலருக்கு இந்த பெயர்கள் பழக்கப்பட்டிருக்கும் என நினைக்கிறேன் வட காலிபோர்னியா பல்கலைகழகத்தின் பார்ட் எர்க்மேன். அவர் இயேசுவையும் மற்ற புத்தகத்தின் ஆவிகளையும் தவறாக எடுத்துரைத்தல் என்ற புத்தகத்தை எழுதியிருக்கிறார். பல செய்தி நிகழ்ச்சிகளில் தோன்றியிருக்கிறார். உயிர்த்தெழுதலைக்குறித்து அவருக்கு என்னதான் பிரச்சனை?

**லீ ஸ்ட்ராபெல்** சரி, வரலாற்றாசிரியர்களுக்கு உயிர்த்தெழுதல் என்ற அற்புதமான நிகழ்வை ஆராய்ச்சி செய்வது ரொம்ப கஷ்டமானது. அதனால அவர், ''உயிர்த்தெழுதலைக் குறித்த நான் அறிந்த எதையும் நான் நம்பமாட்டேன் என்கிறார்.''

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, ஏன்னா இயேசுவினுடைய குடும்ப கல்லறை என்று ஒன்று இருக்கிறதல்லவா. இந்த கருத்து வெளிவந்து அதிக நாட்கள் ஆகியிருக்காதா. அதைக் குறித்து என்ன சொல்வீர்கள்?

**லீ ஸ்ட்ராபெல்** யா, அப்படிதான் சொல்றாங்க இயேசுவினுடைய எலும்புகள் வைக்கப்பட்டிருந்த எலும்பு பெட்டியை கண்டுபிடித்திருக்கிறார்களாம். சரி, அப்படி அவர் எலும்புகள் இருந்தால் அவர் உயித்தெழவில்லையா…..

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** அவர் சரீரம் கல்லறையில் இருக்கும்.

எல்லாரையும்விட ஐமன் அல் -சவாகிரி, அல் கொய்தாவின் இரண்டாம் நபர், அவர் ஜார்ஜ் புஷ்யை குறித்து சொல்லும் போது அதுவும் மதசம்பந்தமானது என்கிறார். அவர் சொன்னது என்ன தெரியுமா?

**லீ ஸ்ட்ராபெல்** அவர் சொல்லும்போது எல்லாரும் இஸ்லாமியத்திங்கு மாறவேண்டும் ஏன்னா இஸ்லாமியர் சரியாக போதிக்கிறவர்கள், அதோடு அவர், இயேசு சிலுவையில் மரிக்கவில்லை அதனால் உயிர்த்தெழ வாய்ப்பில்லை அவர் தெய்வீகமானவர் அல்ல என்றார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆமா, அதற்கு பிறகு ஒரு பிரபலமான இந்து தலைவரும் ஒருசிலவற்றை கூறியிருக்கிறார்.

**லீ ஸ்ட்ராபெல்** யா, இயேசு சிலுவையில் காயப்பட்டார் ஆனால் மறுபடியும் அவர் பல காலம் பூமியில் வாழ்ந்தார் என்று, இந்தியர்களுக்கு, கூறினார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட் அதற்கு பிறகு மைகேல் பேஜியன்டோட இயேசு தாழ்கள் கிடைத்தது. அவர் சூஞஊ யனே ருஞஊ தோன்றியிருந்தார். அதை பற்றி சொல்லுங்களேன்?

**லீ ஸ்ட்ராபெல்** ஆமா, அவர் முன்வைத்த கருத்து பிலாத்து இயேசுவை கொல்ல விரும்பவில்லை ஏன்னா இயேசு மக்களிடம் வரி செலுத்தும்படி கூறிவந்தார், அந்த நல்ல காரியம் தானே. அதனால அவர் சிலுவையில் மரித்தது போல பாவனை செய்தனர், அவர் மரிக்கவில்லை என்கிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா. இவர்கள் எல்லாருமே முகத்திற்கு முன்பாக நின்று தாக்குகிறவர்களாக இருக்கிறார்கள். ஆனா உங்களுக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை குறித்து கேட்க ஆவலாக இருக்கிறது ஹக் ஹை.ஃப்னர பிலே பாய் மேன்சன்ல போய், அவரிடத்தில் பேசினபோது அவர் உயித்தெழுதலைக் குறித்து சுவாரஸ்யமானவற்றை சொல்லியிருந்தார். அந்த சம்பவத்தை நிதானமா எங்களுக்கும் சொல்லுங்க.

**லீ ஸ்ட்ராபெல்** ஆமா. பிலேபாய் மேன்சனுக்கு போகும்படியான வாய்ப்பு கிடைத்தது, நான் தொகுத்து வழங்கிய நிகழ்ச்சிக்காக ஹக் ஹை.ஃப்னர பேட்டி எடுத்தேன். அவரிடத்தில் உயிர்த்தெழுதலைக் குறித்து கேட்டேன். அவர் கொஞ்சம் குழம்பியிருந்தார். நான் அவரிடம், ''உயிர்த்தெழுதலின் ஆதாரங்களைக் குறித்த கருத்து என்ன என்றேன்'' அவர் கேட்டார், ''எதைப் பற்றி பேசுகிறீர்கள்?'' அதற்கு நான், ''இயேசு மரித்து உயிர்த்தார் என்பதன் வரலாற்று ஆதாரங்களை

வைத்து நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டேன்.'' அவர் சொன்னார், ''இதுவரை நான் இதைக் கேட்டதேயில்லை.'' பிறகு அவரிடம் நான் என்னுடைய கிறிஸ்துவைக் குறித்த உண்மை என்ற புத்தகத்தை கொடுத்தேன். அவர் அதிலுள்ள பொருளடக்க அட்டவணையை பார்த்துவிட்டு சொன்னார், ''இது கவர்ந்திலுக்கிறது. இதுவரை ஒருவரும் எனக்கு இதை சொன்னதேயில்லை.''

அதன்பிறகு சுவாரஸ்யமான ஒன்றை அவர் கூறினார். அவர் சொன்னார்,, ''இது உண்மையானால், இந்த முழு உலகிலும் நிச்சயம் பெரிதான தாக்கம் ஏற்படுவது உண்மை.'' அதோடு அவர், ''எனக்கு வயதாகிக்கொண்டே போகிறது. நித்தியமான ஒரு வாழ்க்கை இருக்கவேண்டுமென விரும்புகிறேன் என்றார்.'' அதற்கு நான், ''ஒன்று சொல்லுகிறேன், நீங்களே அந்த ஆதாரங்களை பாருங்கள். நீங்களே ஒரு முடிவு செய்யுங்கள். ஆனா இயேசு உயிர்த்தார் என்பதில் நிருபனமும், வல்லமையான தாக்கம், முழு நிச்சயமும், நம்பப்படும் ஆதாரமும், தெளிவாக இருப்பதில் சந்தேகமில்லை. அவர் தம்மை பின்பற்றுகிறவர்கள் அவரோடு நித்தியத்தில் இருப்பார்கள் என்பதை, முழு நிச்சயமாக விசுவாசிக்க முடியும் என்றேன்.''

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா. இது உங்களுடைய வாழ்க்கை திரும்பி பார்க்க வைக்கிறது. அசைக்கமுடியாத நாத்தியனாக இருந்த நீங்கள் நம்புவதற்கு, ஆதாரமாக இருந்த கேள்வி, இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? என்பது

**லீ ஸ்ட்ராபெல்** ஆமாம். எல்லாமே அதில் அடங்கியிருக்கிறது, ஏனென்றால் தன்னை தேவனுடைய குமாரன் என்று சொல்லிக்கொள்ளலாம். அதை நிருபிக்க முடியுமா? அது நடைமுறையானதா? அதுதான் கவனிக்கவேண்டியவிஷயம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், உயிர்த்தெழுதல் என்ற உண்மை தாக்கப்படுவதை பார்க்கும் முன், எப்படிபட்ட காரியங்கள் தாக்குகிறது என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். நீங்கள் உங்கள் புத்தகத்தில் கேரி ஹேபர்மாஸ் அவருடைய புத்தக்த்தில் கூறியிருந்ததை சொல்லியிருக்கிறீர்கள். 5 எளிதான உண்மைகள் என்னப்படுகிறது. இந்த 5 எளிதான உண்மைகள் என்ன ஏன் அவை முக்கம் என்பதை விளக்கிடுங்கள்.

**லீ ஸ்ட்ராபெல்** இந்த 5 எளிதான உண்மைகள், முதலில், இவையனைத்தும் அதிக முக்கியமானது ஏனெனில் ஒவ்வொரு வரலாற்றாசிரியரும் உண்மை என்று ஏற்றுக்கொள்ளும்படியான சில காரியங்களை இவை எடுத்துரைக்கின்றன. இதன் ஊகங்கள் அவர்களுக்கு பிடிக்காமலிருக்கலாம், ஆனால் கேரி ஹேபர்மாஸ் உயிர்த்தெழுதலைக்குறித்து நாத்திகர்கள் கிறிஸ்தவர்கள் எழுதிய அனைத்தையும் ஆராய்ந்து, 30 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட வரலாற்று புத்தகத்தை பிரென்ச்,இ ங்கிலீஷ், ஜேர்மனில் வாசித்தார். அதனுடைய நிலைகளை அவர் நிதானித்தார். அதனால் இந்த காரியம், இந்த எளிதான விஷயம் 2 காரியங்களின் அடித்தளம், முதலாவது இந்த உண்மைகள்,வலுவான ஆதாரமாயிருக்கிறது, இதற்கு வலுவான வரலாற்று ஆதாரமும் உள்ளது, இரண்டாவதாக, அனைத்து ஞானிகளும் அலசி ஆராய்ந்து, இறைநம்பிக்கையற்றவர்களும், இதை உண்மையென் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆதனால் தான் இந்த காரியம் மிகவும் வல்லமையுள்ளது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட். இப்ப நாம் என்ன செய்கிறோம் என்றால் இந்த 5 உண்மைகளையும் பார்க்க இருக்கிறோம் அதோடு ஞானிகள் இது உண்மை என்பதை ஏற்றுக்கொள்ளும்படி செய்த ஆதாரங்களையும் பார்க்க இருக்கிறோம். அதன் பிறகு முடிவிற்கு வரலாம், உங்களுக்கு அது இக்கட்டான நிலையாக தெரியலாம். இந்த உண்மைகள் சத்தியம் என்பதை எந்த வரலாற்று ஆதாரம் நமக்கு விளக்கி காண்பிக்கிறது? அதை நாம் பார்க்கப்பபோகிறோம்.

அடிப்படையாகவே அது உயிர்த்தெழுதலைக்குறித்தது, ஆனால் முதலாவது உண்மை என்னது?

**லீ ஸ்ட்ராபெல்** முதலாவது உண்மை இயேசு சிலுவையிலறையப்பட்ட மரித்தார். அதாவது, ஜான், இதை எல்லாரும் முழுமையா நம்பறாங்க வரலாற்றாசிரியர்கள், நாத்திகரும் இறைநம்பிக்கையற்றவரும் நம்புகிறார்கள். வான்டர்பில்ட் பல்கலைகழகத்தின் கிரெட்லூட்மேன், ஒரு நாத்திகர், வரலாற்றுபடி இது உண்மை என்கிறார். இதை உண்மை என்பது நமக்கு தெரியும். ஜான் டாமினிக் கிரோசன், முற்போக்குவாதி, இது உண்மை என்கிறார். அதோடு ஜேம்ஸ் டோபர், ஒரு விரிவுரையாளர், அவரும் ஒரு நாத்திகர், இதை நடந்த ஒரு சம்பவம் என்கிறார், இயேசு சிலுவையிலறைந்து கொல்லப்பட்டார். வேதத்தின் 4 சுவிசேஷங்களோடு இன்னும் பிற ஆதாரங்கள் இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்பட்டபோது மரித்திருந்தார் என்பதை நிருபனம் செய்கின்றன. சோ, அதாவது, வரலாற்று ஈதியாக இதற்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை. சில ஜாலராக்கூட்டங்களை தான் சமாளிக்க வேண்டியுள்ளது, அவர்கள் கருத்து, ‘‘ஓ, இயேசு உயிரோடில்லை.’’ இப்படிபட்ட ஜீவன்கள் தான் தேவையற்ற காரியங்களை சொல்கிறார்கள். ஒருவேளை நீங்கள் நேர்மையான ஞானியாக இருந்தால் நிச்சயம் இயேசு சிலுவையில் அறையப்பட்டு மரித்தவராக இறக்கப்பட்டதை ஏற்க்கொள்வீர்கள். அது உண்மைதான்…

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா. ஆனா இன்னும் பிரபலமான பல புத்தகங்கள் விற்பனையில் உள்ளது. எனக்கு இன்னும் நினைவிருக்கிறது கல்லூரி நாட்கள்ல, திரு ஹக் ஸ்கான்பீல்ட் அவர்களுடைய தி பாஸ்ஓவர் பிளாட் என்ற புத்தகத்திலும் மற்ற எழுத்தாளர்களின் கூற்றிலும், அவர்கள், இயேசு கல்லறையில் பிழைத்துக்கொண்டார் என்றிருந்தது. அதைக் குறித்து சிறுது நேரம் பார்க்க இருக்கிறோம். அவர் எப்படியோ அங்கிருந்து தப்பித்து எகிப்திற்கோ ஸ்பெனிற்கோ சென்றுவிட்டாராம். இயேசு பிரயாணித்து, சென்றார் என்கின்றனர், இந்தியாவிற்கு வந்திருக்கலாம்…

**லீ ஸ்ட்ராபெல்** சரிதான். இன்னமும், சொல்வேன், அந்த கேள்விக்கு பதில் வேண்டுமானால் இயேசு சிலுவையிலிருந்து இறக்கப்பட்ட போது எப்படிபட்ட நிலையில் இருந்திருப்பார் என்பதை பார்க்கவேண்டுமே? அப்படிபட்ட நிலை எப்படி அவருடைய விசுவாசிகள் ஒருநாளில் நாமும் இப்படி உயிர்த்தெழுதலின் சரீரத்தை அடைவோம் என்ற நம்பியிருப்பார்கள், அதோடு உலகம் முழுவதிலும் இந்த மகிமையின் நம்பிக்கை குறித்து எப்படி சொல்லமுடியும்? இயேசு நிச்சயம் பரிதாப நிலையில் தான் இருந்திருப்பார். இரத்தத்தின் இழப்பினால் அவருக்கு அதிர்ச்சியுண்டாயிற்று, நான் சந்தித்த மருத்துவ நிபுனர்கள் சொன்னது அது, அவர் சிலுவையிலறையப்படும் முன் பட்ட அடிகளால் உண்டாயிற்று. அவருடைய நுரையீரலையும் இருதயத்தையும் ஈட்டி கிழித்தது, அதை மறுக்கமுடியாதே. அதாவது, அவர் சிலுவையிலிருந்து உயிரோடிறக்கப்பட எந்த வாய்ப்பும் இல்லை. அமெரிக்க மருத்துவ அமைப்பின் இதழில் அவர்கள் வரலாற்று அறிக்கைகளை நன்கு ஆராய்ந்து எழுதிய கட்டுரையில் இயேசு சிலுவையில் மரிக்கவில்லை என்று சொன்னால் அது நவீன மருத்துவத்திற்கும் வரலாற்று ஆதாரத்திற்கும் முரண்பாடாக இருக்கும் என்றெழுதியுள்ளனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆமாம். ரோம சேவகர்கள் இயேசு மரித்துவிட்டார் என்பதை ஆணித்தரமாக உறுதிசெய்துகொண்டார்களே?

**லீ ஸ்ட்ராபெல்** அது அவங்க வேலையாச்சே. அதை அவர்கள் செய்யவேண்டியது அவசியம். அதாவது, இயேசு மரித்த பின்பு அவருடைய மரணத்தை குறித்து அநேகர் அறிக்கையிடுத்திருக்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அவர் ஜீவனோடு இல்லை என்பதை அவர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** சிலுவை மரணம் ஏன் மூச்சுத்திணரலினால் உண்டாகிறது?

**லீ ஸ்ட்ராபெல்** அது உங்களுடைய நெஞ்சுப்பகுதியின் தசைகளுக்கு அதிக அழுத்தம் கொடுக்க மூச்சை இழுக்க முடியாதபடி நுரையீரல் அடைபடுகிறது, அதனால் சுவாசிக்க இயலாமற்போகும். அதற்கு ஒரே வழி சிலுவையில் தொங்கும் நிலையில் மேல்நோக்கி உந்தினால் அழுத்தம் குறைந்து மூச்சை இழுத்து விடுவதற்கு சிரமம் இருக்காது இப்படியே செய்யதுகொண்டிருக்கவேண்டும்.ஒரு சில நிமிடத்திற்கு அமைதியாக இருப்பதுபோன்றிருக்கும், ஆனால் மறுபடியும், உங்கள் இருதயம்

நெருக்கப்படும் ஏனெனில் தொங்கும் பொழுது அழுத்தம் அதிகரிக்க சுவாசிக்க முடியாத நிலை உண்டாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா. உங்களை கவனிக்கும் ரோம சேவகன் நீங்கள் 30 நிமிடங்களுக்கு அசையாமல் இருப்பதைக் கண்டால் மரித்துவிட்டீர்கள் என்பதை அறிவான்.

**லீ ஸ்ட்ராபெல்** மரித்திருப்பீர்கள். மரித்திருப்பீர்கள்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட். இயேசு மரித்தார் என்பது நம்பகரமான உண்மை. அது மிகவும் முக்கியமான ஒன்று. ஏன் அது முக்கியமானது என்பதை பிறகு பார்த்திடலாம், இப்ப இரண்டாவது உண்மை என்ன?

**லீ ஸ்ட்ராபெல்** இரண்டாவது சீஷர்களிடம் காணப்பட்ட நம்பிக்கை அவர்கள் உயிர்த்த இயேசுவை கண்டனர். சரி, இதை 3 ஆதாரங்களைக் கொண்டு சொல்லலாம். முதலாவதாக, பவுல் அதில் அடங்குவார், அப்போஸ்தலனாகிய பவுல். அப்போஸ்தலனாகிய பவுல், வரலாற்று குறிப்புகளிலிருந்து பார்த்தால், அவருடைய நண்பர்கள் பட்டியலில் யாக்கோபு, பேதுரு, யோவான், இயேசுவின் நெருங்கிய சீஷர்கள் உள்ளனர். மேலும் பவுல், உயிர்த்தெழுந்த இயேசுவோடு தனக்கு உண்டான அனுபவத்தைப் பற்றி அவரே கூறுகிறார், அவரை சந்தித்ததாகவும் அவர் ஜீவனுள்ளவர் என்றும் கூறுகிறார். அவர் கூறும்போது 1 கொரிந்தியர் 15, வசனம் 11ல் அவரும் மற்ற சீஷர்களும் இந்த காரியத்தையே பிரசங்கிக்கிறோம் என்கிறார். நானும் அதே பாதையில் தான் இருக்கிறோம். இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதை இந்த மக்கள் அனைவரும் சொல்லக் கேட்கிறோம். இரண்டாவது, வாய்மொழி பாரம்பரியம் இருந்தது, அதாவது, ஆதிகால கிறிஸ்தவர்கள் தங்கள் கோட்பாடுகளை துதிப்பாடல்களாக கொண்டிருந்தனர் எனவே உயிர்த்தெழுதலைக்குறித்த காரியமும் பரவியிருக்கும் அதை கட்டுகதையாக தயாரித்துள்ளனர் என்று சொல்ல முடியாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** அவர்களில் சிலர் புத்தகம் மற்றும் அப்போஸ்தலர்களின் நிருபங்கள் மூலமாக அறிந்துகொண்டனர்.

**லீ ஸ்ட்ராபெல்** நிச்சயமாக. ஆப்போஸ்தலர் பவுல், எல்லாரும் ஏற்றுக்கொண்டதை, 1 கொரிந்தியரில் எழுதுகிறார், அது வேதத்தின் புதிய ஏற்ப்பாட்டில் இருக்கிறது. சுமார் கிபி 55 ல் எழுதப்பட்டது. இயேசு மரித்த காலம் கிபி 30. மேலும் அதற்கு முந்தைய காலங்களையும் நம்மால் கண்டறிய முடியும், ஏனென்றால் அதைத் தான் அவர் சொல்கிறார். அதை நான் உங்களுக்காக வாசிக்கிறேன். அவர், “நான் பெற்றுக்கொண்டதை உங்களுக்கு பிரதானமாக ஒப்புவிக்கிறேன் என்கிறார்.” வேறு வார்த்தைகளில், இதை நான் ஏற்கனவே உங்களுக்கு சொல்லியிருக்கிறேன், அதனால் இதை, நான் உருவாக்கவில்லை என அறிவீர்கள். இதை நான், வரலாற்று நம்பிக்கைகளில் பெற்றேன் பேதுரு மற்றும் யாக்கோபு சொன்னது, உயிர்த்தெழுதலும் பிற்பாடு அறிவித்தனர். “கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து கேபாவுக்கும் பின்பு பன்னிருவருக்கும் தரிசனமானார். அதன்பின்பு அவர் ஐந்நூறுபேருக்கும் அதிகமான சகோதரருக்கும் ஒரேவேளையில் தரிசனமானார் அவர்களில் அநகர் இந்நாள் வரையிலும் இருக்கிறார்கள்.” இப்படியும் சொல்லலாம், என்னை நம்பாவிட்டால் அவர்களைப் போய் கேளுங்கள்.” “சிலர் மாத்திரம் நித்திரையடைந்தார்கள்” – சிலர் மரித்துவிட்டார்கள். பின்பு யாக்கோபுக்கும் அதன்பின்பு, அப்போஸ்தலர் எல்லாருக்கும்,எனக்கும் தரிசனமானார்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** சரி,ஜோய்கிம்ஜெர்மையாஸ், யூத பண்டிதர், கூறும்பபோது இது உண்மையான பாரம்பரியமானவை என்கிறார். பவுல் உபயோகித்த ஒவ்வொரு வார்த்தைகளும் அவருடையதாகவே இருக்கவேண்டியதிலலை, இந்த வார்த்தைகள் அடுத்தவர்களிடமிருந்து அவர் கேட்டிருக்கலாம்.

**லீ ஸ்ட்ராபெல்** இது உடனே நடத்திருப்பதால் இதனை கட்டுக்கதை என்று எந்த விதத்திலும் சொல்ல முடியாது. ஏனவே அது சத்தியத்தை நிருபிக்க வலிமையான சாட்சியென நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கொ்பெர்க்** அதை நாம் அறிந்துகொள்வது கலாத்தியா் 1 மற்றும் 2ன் மூலம், பவுல் அங்கே தன்னுடைய பிரயாணத்தை எழுதுகிறாா், அவா் இரட்சிக்கப்பட்ட பிறகு அவா் திரும்ப போய், அதாவது, அவா் இரட்சிக்கப்பட்டு 3 வருடங்கள் கழித்து திரும்பவும் எருசலேமுக்கு போகிறாா். இயேசு மரித்து உயிா்த்தெழுந்த 2 வருடங்களுக்குள்ளாக அவா் இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படியானால், அவா் இரட்சிக்கப்பட்டது கிபி 32, 3 வருடம் என்றால் கிபி 35. இப்போது எருசலேமில் பேதுருவோடும் யாக்கோபு யோவானோடும் இருக்கிறாா். அதைத்தான் அவா் சொல்கிறாா் என நினைக்கிறேன்.

அவா் உபயோகிக்கும் வாா்த்தை ஹிஸ்டோரவோ

**லீ ஸ்ட்ராபெல்** அதன் அா்த்தம் ஆராய்ந்தறிதல், குறிக்கு விசாரனை செய்தல்.

அவா் விரும்பிய காரியம், நாம் ஒரே பாதையில் போகிறோம் என்பதை உறுதிசெய்திடலாம். அவா்கள் சொல்கிறது என்னவென்று அவன் அறிந்திருந்த போதிலும் அதை உறுதிசெய்துகொள்ளும்படி அவா்களிடம் கேள்விகளை கேட்டு தன்னுடைய கூற்றுடன் அவைகள் பொருந்தியுள்ளதா என்பதை உறுதிசெய்கிறாா். சரி, அதோடு கூட, சில பண்டிதா்கள் அவா் இயேசுவை பின்பற்றின சிலருடைய வாா்த்தைகளை கேட்டவுடனே தமது கோட்பாடுகளை வெளியிட்டதாக நினைக்கிறாா்கள். எப்படியிருந்தாலும், இவை ஆதிகாலத்தில் உண்டானவை. அதை யோசியுங்கள். இதை ஒரு கொள்கையாக வரையப்படுவதற்கு முன்னமே இந்த கோட்பாடுகள் ஆதிமுதலாய் இருப்பதாக நம்பப்படுகிறது, எனவே நாம் நேராக சிலுவைக்கு செல்லவேண்டியது அவசியம். அது அசாதாரணவிதமான வரலாறாக காணப்படுகிறது. ஆதிகாலத்தின் செய்தி சாரல் என்று வைத்துக்கொள்ளலாம். இது அரிதானது, இது வரலாற்றிலேயே உன்னத மனிதா் என்று வலிமையான உண்மை.

**Dr. ஜான் அன்கொ்பெர்க்** யா, அவா் பெற்றுக்கொண்டவற்றை, பேதுருவிடம் பெற்றிருப்பாா், யாக்கோபு யோவான், பேதுரு இயேசுவை பாா்த்தவா்களில் இவா்களும் உண்டு.

யாக்கோபு, வாழ்க்கையில் இறைநம்பிக்கை இல்லாதிருந்தவன், இவா் தான் முதன்முதலில் பவுலுக்கு சொல்லுகிறாா், ‘‘என் சகோதனைக் கண்டேன்’’.

**லீ ஸ்ட்ராபெல்** இது ரொம்ப முக்கியமானது. பவுல், சொல்லப்போனா, உயிா்த்தெழுந்த இயேசுவை கண்டதற்கு பிரத்தியேக சாட்சி, இந்த கோட்பாடுகளை ஏதோ தெருவில் போகிறவா்களிடம் பெற்றுக்கொள்ளவில்லை, அவன் தானே அதற்கு சாட்சியாக இருப்பதால் சொல்கிறான். அதனால பின்சாஸ் லேபைடீ, என்ற யூத பண்டிதா் இது மறுக்கமுடியாத அசைக்கமுடியாத வரலாற்று பதிப்பாகும் ஏனெனில் அது சாட்சிகளினால் உண்டானது என்கிறாா்.

பவுலுடைய சாட்சி உண்டு, சொல்வழக்கு கொண்ட பாரம்பரியம், அதன் பிறகு எழுத்தினால் உண்டான பதிப்பின் ஆதாரம். நம்மிடம் மத்தேயு, மாற்கு, லூக்கா யோவான் இவற்றை எழுதியுள்ளனா். ஆதி திருச்சபையின் பாதிரிகள் இருக்கிறாா்கள். இது முக்கியமான விஷயம்.

**Dr. ஜான் அன்கொ்பெர்க்** தொடா்ந்து பாா்ப்பதற்கு முன்பு, சிலா் இப்படி சொல்கிறாா்கள், ‘‘ஒரு நிமிஷம், ஸ்டிராபெல், இப்ப மாட்டிக்கிட்டீங்க, அதாவது, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான். நீங்க, அச்சுப்பிழையற்ற எழுதப்பட்ட தேவனுடைய வாா்த்தை என்பதை நம்புகிறீா்களா?

**லீ ஸ்ட்ராபெல்** அதைக் குறித்து பிறகு பாா்க்கலாம்.

அதைப் பற்றி இப்ப பேச வேண்டாம். புதிய ஏற்ப்பாட்டை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன் அதை மறுக்கமுடியாது. அது ஆதிகால வரலாற்று பதிப்பு. எனவே வரலாற்றின் சோதனைகளை எடுத்து மற்ற புத்தகங்களைப் போல ஆய்வு செய்திடலாம். அதற்கு வேறெந்த கண்ணோட்டமும் வேண்டாம்.

இப்போதைக்கு இது தேவனுடைய வார்த்தை என்ற கோணம் வேண்டாம். தேவைதான், ஆனா இப்ப அது வேண்டாமே, அதில் என்ன இருக்கிறோ அதை மட்டும் ஆய்வு செய்யலாம். அப்படி நீங்கள் அதை ஆய்வு செய்யும் போது அதிலுள்ள துள்ளியமானவற்றை பார்க்க முடியும், சாட்சிகளின் விபரங்களை அறிந்திடலாம். மேலும் ரிச்சர்ட் பக்ஹம் அவருடைய பிரத்தியேக புதிய புத்தகமான, இயேசுவும் கண்னால் கண்ட சாட்சிகளும், என்ற புத்தகத்தில் சுவிசேஷங்கள் தாங்கள் கண்ணால் கண்ட சாட்சியை உறுதிசெய்கிறது என்று கூறப்பட்டுள்ளது.

அதோடுகூட ஆதி திருச்சபைகளின் பிதாக்களும் சொல்கிறார்கள், யோவானின் சீஷனாகிய பாலிகார்ப்பின் சாட்சி உள்ளது. அவருக்கு யோவானை தெரியும். அவர் யோவானால் சீஷனாக்கப்பட்டார். பாலிகார்ப் என்ன சொல்லகிறார்? இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்று அவர் சொல்லுகிறார். மேலும் அலெக்சாந்திரியாவின் கிளமென்ட் , பேதுருவினால் நடத்தப்பட்ட சீஷன், உயிர்த்தெழுதலைக்குறித்து சாட்சியிடுகிறார். குளமென்டும் இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தார் என்கிறார். அதனால ஆதி திருச்சபையின் பாதிரிமார்கள் தாங்கள் விசுவாசித்ததை எழுத்தின் வடிவில் உறுதிசெய்துள்ளனர்.

ஆதனால நான் என்ன சொல்றன்னா, ஜான், சீஷர்கள் இதை விசுவாசித்தனரா என்ற கேள்வி விவாதத்திற்கு தேவையில்லாத ஒன்று, ஏனென்றால் நம்பிக்கையற்றவர்களும் அதை ஏற்றுக்கொள்கின்றனர். இறைநம்பிக்கை அற்றவர்களும் ஏற்றுக்கொள்வார்கள், உதாரணம் கிரிட்லூர்ட்மேன். முன்னமே சொல்லியிருக்கிறேன், நாத்திக புதிய ஏற்பபாட்டு பண்டிதர், வான்டர்பில்ட் பல்கலைகழகம், இந்த மறுக்க முடியாத வரலாற்று சான்றை கூறியிருக்கிறார். வரலாற்று ரீதியாக இது உண்மை என்பது தெளிவாகிறது. ஆதை அவர்கள் நம்புகிறார்கள். இப்ப அதைவிட்டு விலக நினைக்கிறார், ஏன் என்ற விளக்கமளிக்க முயலுகிறார், ஆனால் அவருடைய விளக்கங்கள் ஏற்புடையதாக இல்லையென நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், இப்ப ஒரு இடைவேளை எடுக்கலாம், மீண்டும் வந்து அடுத்த உண்மைகளைக் குறித்து பார்க்கலாம். எங்களோடு இணைந்திருங்கள். இது அருமையாக போய்க்கொண்டிருக்கிறது, ஆனால் ஒரு இடைவேளை அவசியம். மீண்டும் சந்திப்போம்.

!!!

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், தொடர்ந்து பார்க்கலாம். நாம் இப்போது பேசிக்கொண்டிருப்பது லீ ஸ்டிராபெலுடன். ஆவர் சிக்காகோ டிரிபூனின் சட்ட பதிப்பாசியராக 13 வருடங்கள் இருந்திருக்கிறார். இறைநம்பிக்கையற்ற, நாத்திகர். அப்போது ஒரு முக்கிய ஆதாரத்தை பெற கிறிஸ்தவத்தைக் குறித்து ஆய்வு செய்யும் போது அவர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். அவர் ஆய்வு செய்ய நினைத்த காரியங்களில் முக்கியமான ஒன்று, இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? அதற்கு என்ன ஆதாரம்? இதைத்தான் இன்றைய வல்லுநர்களும் பண்டிதர்களும் முன்வைத்து தாக்குகின்ற கேள்வி. அதற்கான பதில்களை வழங்குகிறோம், முதலாவதாக, பிரச்சனை தான் என்ன? அதை நீங்கள் தாக்க நினைக்கிறீர்கள், ஆனால் உண்மை என்ன என்பதை பார்க்கலாம். இப்போதும் 5 எளிதான உண்மைகளை முன்வைக்கிறோம் இதைத்தான் கடினமான பண்டிதர்கள், கிறிஸ்தவர்களும் கிறிஸ்துவை அறியாதவர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அதிலிருந்து மறுபடியும் தொடங்க இருக்கிறோம் மேலும் இந்த உண்மைகனைப் பற்றி விமர்சகர்கள் என்ன சொல்கிறார்கள் என்றும் பார்க்கலாம். இப்போது அப்போஸ்தலனாகிய பவுல் கூறியவற்றை பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**லீ ஸ்ட்ராபெல்** ரைட், இ ங்கு பவுல் சொல்வதை பார்க்கிறோம், அவர் சொல்லும் போது உயிர்த்தெழுந்த இயேசுவினுடைய தரிசனத்தை பெற்றபிறகு சபை துன்புறுத்துகிறவனாக வலம் வந்துகொண்டிருந்தவர் வாழ்வில் --- அதாவது, கிறிஸ்தவர்கள் கொன்று கிறிஸ்தவ அமைப்பை

அடியோடு அழித்திட நினைத்தவர், பரிசேயர், உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்த பிறகு, 180டிகிரி மாற்றம், இதுவரை இல்லாத ஒரு மிகப்பெரிய அருட்பணியாளர் ஆனார். மேலும் பவுல் அவருடைய விசுவாசித்தின் நிமித்தம் பல பாடுகளையும் சகிக்க ஆயத்தமுள்ளவராக இருந்தார் என்பதற்கு பல வரலாற்று ஆதாரங்கள் நம்மிடம் இருக்கிறது. ஏன் அவர் அதிகார வேலையை விட்டுவிட்டு, பிரபலத்தை விட்டு, பரிசேயராக இருந்ததை விட்டுவிட்டு வழியிலும், காயத்திலும் போராட்டத்திலும் மரணத்திற்கு நேரான வாழ்வை ஏற்றார்? எதற்காக? ஏனென்றால், 1 கொரிந்தியர் 15லும் மற்ற இடங்களிலும் சொல்லப்பட்டுள்ளது, உயிர்த்தெழுந்த இயேசுவை அவர் சந்தித்தார் அவருடைய குற்றத்தை உணர்ந்துகொண்டார், இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற விசுவாசத்தினால் அல்ல அதை அவர், அறிந்திருந்தார்! அதை நேரடியாக சந்தித்தார், அவரோடு இவர் பேசினார். ஆதன் விளைவு தான் வாழ்வில் 180 டிகிரி மாற்றம் பெற்றார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** யா, அவர் விசுவாசத்தை சார்ந்திருந்ததால் அப்படி நடக்கல. ஆரம்பத்திலிருந்து இதற்கு எதிராகதானே இருந்தார்.

**லீ ஸ்ட்ராபெல்** அவர் விருப்பப்பட்டு எதையும் நினைக்கவில்லை, இயேவை அவர் விசுவாசித்ததால் அவர் திரும்ப வரவேண்டுமென்ற சிந்தனையால் அவருடைய ரூபத்தை கற்பனை செய்யவில்லை. அவர் கிறிஸ்தவத்தை வெறுத்தார், கிறிஸ்தவர்களை கொல்ல நினைத்தார். அப்படிபட்ட காரியங்களுக்கு அவர் மனங்கசந்தது கிடையாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், அடுத்தது என்ன உண்மை?

**லீ ஸ்ட்ராபெல்** யாக்கோபுடைய வார்த்தைகள், இயேசுவினுடைய சகோதரன். இது நம்மை கவர்ந்திடும் காரியம். வரலாற்று சான்றுகள் மூலம் யாக்கோபு இயேசு வாழ்ந்த காலத்தில் அவரைப் பின்பற்றினவர்களின் கூட்டத்தில் இல்லை என தெரியும். நமக்கு எப்படி தெரியும்? சரி, முதலாவதாக, அது புதிய ஏற்ப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. சரி, நாம் எதற்காக அதை நம்பவேண்டும்? ஏனென்றால் திகைப்பான காரியத்திற்கு ஒப்புமை வேண்டுமே. வரலாற்றாசிரியர்கள் வரலாற்று பூர்வமாக கவனித்த போது அதை கண்டதாக சொன்னவர்களை கூற்றை கேட்டு திகைத்தனர், அது உண்மை என்பதை அறிந்திருந்தனர், ஏனென்றால் திகைக்கச் செய்யும் காரியத்தை எதற்காக அவர்கள் எழுதவேண்டும், உங்களுக்கே வியப்பாக இருக்கிறதே? சரி, முதலாம் நூற்றாண்டில் இருந்த இயேசு போன்ற ஒரு நல்ல, போதகருக்கு, அவருடைய குடும்ப நபர்களில் ஒருவரும் சீஷராக இல்லாதது வியப்பாக இருக்கும். உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா, அதை நீங்கள் ஒத்துக்கொள்வீர்களா, அது பொய்யாக இருக்குமா. சரி, புதிய ஏற்பாடு கூறுகிறது இயேசு வாழ்ந்த காலத்தில் யாக்கோபு இயேசுவை விசுவாசிப்பவனாக இருக்கவில்லை, அதனால அதுதா உண்மை.

அதன்பிறகு பொதுவான ஒரு தொகுப்பில் இருந்தது, ஜோசபஸ் என்ற யூத வரலாறறிஞர், யாக்கோபு எருசலேமின் சபை தலைவராக இருந்து மரணத்திற்குட்பட்டார் என்கிறார். ஆக அவர் இயேசு தேவனுடைய குமாரன் உயிர்த்தெழுந்தவர் என்ற தனது விசுவாசத்தினிமித்தம் கொல்லப்பட்டார். என்ன நடந்தது? 1 கொரிந்தியர் கூறுகிறது இயேசு, உயிர்த்தெழுந்த இயேசு, யாக்கோபுக்கு தரிசனமானார். அதனால் என்ன நடக்கிறது? வில்லியம் லேன் கிரேக், ஒரு பண்டிதர், என்ன நடந்தது எதனால நீ இதை ஏற்றுக்கொண்டாய், உன் சகோதரன் தேவ குமாரன் என்று எப்படி ஏற்றுக்கொண்டாய்? அதற்கு நிலையான காரணம் இருக்கவேண்டும். உன் சகோதரனைக் குறித்து அறிந்துகொண்டாய், ஓகே. என்னுடைய சகோதரன் தேவனுடைய குமாரன் என்பதை நான் ஏற்றுக்கொள்ள ஏதாவது திடமான விஷயம் நடக்கவேண்டும். சரி, இப்ப சொல்றேன், யாக்கோபுக்கு ஏதோவொன்று நடந்திருக்கிறது, கல்லறையிலிருந்த 3 நாட்களுக்கு பிறகு இயேசு யாக்கோபுக்கு தரிசனமானது அவனை அசைத்தது இறுதியில் அவனுடைய விசுவாசத்திற்காக மரிக்கசெய்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** சரி, அதை கொஞ்சம் யோசித்து பாருங்க, ஒரே ஒரு நிமிஷத்தில் நடந்த விஷம்.

ஓகே? திடீரென்று உயிர்த்தெழுந்த தனது சகோதரன் தனக்கு முன்பாக நிற்கிறார்.

**லீ ஸ்ட்ராபெல்** அந்த ஒரு நிமிஷத்தில் அவருடைய போதனைகள் அவர் பேசிய காரியங்கள் அனைத்தும் நினைவிற்கு வந்திருக்கும் அவர் யோசித்திருப்பார் ''ஓ, நா, தப்பா நினச்சுட்டேன்''.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட், ஐந்தாவது உண்மை வெறுமையான கல்லறை

**லீ ஸ்ட்ராபெல்** வெறுமையான கல்லறை என்பதை வரலாற்றாசிரியர்கள் இறைநம்பிக்கையற்றவர்கள் உட்பட 75 சதவிகிதத்தினர் ஏற்றுக்கொண்டனர்.

இது ரொம்ப பெரிய அளவு. முற்ற குறிப்புகள் உலகலாவிய, வகைதான், ஆனால் 75 சதவிகிதம் மிகவும் பெரிது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆமா, 75 சதவித வாக்கு பெற்ற ஜனாதிபதியை, இ ங்க போப்பாக தேர்வுசெய்திடுவோம், சரிதானே.

**லீ ஸ்ட்ராபெல்** நிச்சயமா, உண்மைதான். இன்னும் 3 குறிப்புகளுண்டு, விரைவா, இந்த வெறுமையான கல்லறையை பார்த்திடலாம். முதலாவதாக, எருசலேமின் காரியங்கள் இருக்கிறது. அதாவது சீஷர்கள் திடன் பெற்று, இயேசு மரித்த அதே பட்டணத்தில் எழும்பி நின்று, அவர் மரணத்திலிருந்து உயிர்த்தார் என்பதற்கு நாங்கள் சாட்சிகள் என்று பகிரங்கமாக சொன்னதால் அது பொய் இல்லை என தெளிவாகிறது. அவர்கள் பொய் சொல்கிறார்களா இல்லை, கதைகட்டுகிறார்களா என தெரியுமே. இந்த இடத்தில் தான் முதன்முதலில் சபை தோன்றியது என பார்க்கிறோம், ஏனென்றால் உயிர்த்தெழுந்த இயேசுவைப் பற்றி பேசும்போது அவர்கள் சொல்வது உண்மையெ மக்கள் அறிந்திருந்தனர். இரண்டாவதாக, எதிராளிகளின் சாட்சியம். அதனுடைய அர்த்தம் என்னவென்றால் இயேசுவின் எதிரிகளும் கல்லறை வெறுமையாக இருப்பதை ஏற்றுக்கொண்டனர். அங்கிருந்த வாக்குவாதம் சீஷர்கள் அவருடைய சரீரத்தை திருடிவிட்டனர் என்பது. அவர்கள் பரப்பிய வதந்தி அது. சரி, அதை யோசியுங்கள். அதில் எந்த அர்த்தமும் இல்லையே. சேவகர்கள் தூங்கீட்டு இருந்தாங்கன்னு வைத்துக்கொள்வோம். சரி, தூங்கீட்டு இருந்தவங்களுக்கு சீஷர்கள் தான் சரீரத்தை திருடீட்டு போனாங்கன்னு எப்படி தெரியும்? அப்படி செய்ய அவர்களுக்கு எந்த நோக்கமும் எண்ணமும் வாய்ப்பும் அங்கு இல்லை. இது ரொம்ப தப்பு. அப்ப யாருமே அத நம்பல, இப்பவும் யாரும் அத நமபல.

ஆனா யோசித்து பாருங்க. நா உங்ககிட்ட வ்ற நான ஒரு சின்ன பையன் நீங்கதான என்னோட டீச்சர் நா உங்ககிட்ட வந்து நாய் என்னோட வீட்டு பாடத்தை சாப்டுருச்சு, எங்கிக்க வீட்டுபாடம் இல்லன்றத நா ஒத்துக்கொள்றேன். எங்கிட்ட வீட்டுபாடம் இருந்திருந்தா நா ஏ அப்படி ஒரு கதை சொல்லனும்? சரி, அதே மாதிரிதான். சரீரம் கல்லறையிலேயே இருந்திருந்தா எதற்காக சீஷர்கள் தூக்கீட்டு போய்ட்டாங்கன்ற கதை பரப்பி விடனும்? சரீரம் அங்கே இல்லை என்பதை ஒத்துக்கொள்கிறார்கள்.

மூன்றாவதாக அந்த ஸ்திரீயின் சாட்சி இருக்கிறது. சுவிசேஷங்கள் கல்லறை வெறுமையாயிருந்ததை ஒரு பெண் பார்த்ததாக நமக்கு கூறுகிறது. அது ஏன் முக்கியம், மறுபடியும், திகைப்பான காரியங்களுக்கு ஒப்புமை வேண்டும். முதல் நூற்றாண்டின் யூத ரோம கலாச்சாரத்தில், பெண்களுடைய கூற்று அதிக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. அவர்களுக்கு எந்த மதிப்பும் இல்லை. பொதுவான சட்டப்படி, நீதிமன்றத்தில் பேசுவதற்கு அவர்களுக்கு அதிகாரமில்லை. எனவே ஆண்கள் அதாவது கல்லறை வெறுமையாக இருக்கிறதை யோவான் பார்க்கவில்லை, பேதுரு இல்லை, எபண்தான் பார்த்தாள். வெறுமையான கல்லறையை குறித்து கதைகட்ட வேண்டும் என்றால், நீங்கள் அந்த கதையை உருவாக்க நினைத்தால், கல்லறை வெறுமையாக இருப்பதைஒரு பெண்தான் முதலில் பார்த்தாள் என்பதை சொல்ல மாட்டீர்கள். அப்படி சொல்ல தயங்குவீர்கள். அவர்களுடைய நேயர்களுக்கு முன்பாக தங்கள் மானத்தை கெடுத்துக்கொள்ள மாட்டார்கள். கல்லறை வெறுமையாக இருப்பதை யோவான் பார்த்தார் என்றிருப்பீர்கள். மாறாக ஒருபெண் கல்லறை வெறுமையாயிருப்பதை பார்த்தாள் என்றிருக்கிறது. ஏன்? அதுதான் நடந்தது, அந்த உண்மையை சொல்லும்படியான கட்டாயம் உண்டானது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** ஆல்ரைட். உயிர்த்தெழுதலைக்குறித்து இயேசுவினுடைய நண்பர்களுடைய அடுக்கடுக்கான சாட்சிகள் இருக்கின்றன. கிறிஸ்தவத்தின் எதிரிகள், நம்பிக்கையற்றவர்கள், யாக்கோபு. இயேசுவினுடைய கல்லறை வெறுமையாக இருந்தது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் உள்ளன. ஏதிரிகள் கூட அதனை ஏற்றுக்கொண்டனர். எந்த சரீரம் எங்கு போனது என்பதற்கு பதில்வேண்டும், சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக கூறுகிறார்கள்.

**லீ ஸ்ட்ராபெல்** இவையனைத்தையும் இணைத்திடுங்கள், ஜான், ஒருவேளை இது மிக எளிமையான உண்மைகள் தான் --- இன்னும் அசைக்க முடியாத உறுதியான ஆதாரம் உள்ளதென நம்புகிறேன் --- ஆனால் அதை விட்டுவிடலாம். இந்த உலகின் ஞானிகள் பண்டிதர்கள் இதைக் குறித்து என்ன சொல்லுகிறார்கள், நாத்திகர்களோ கிறிஸ்தவர்களோ, யாராயிருந்தாலும் சரி, இந்த எளிமையான உண்மைகள் நிச்சயம், நான் நம்புகிறேன், இயேசு கல்லறையிலிருந்து வந்துவிட்டார் என்பதை நான் நம்புவதற்கு போதுமான ஆதாரங்கள் என்று சொல்லுவேன். அது ஏன் முக்கியமானது? ஏனென்றால் அதனுடைய சாராம்சம் அப்படி, அவர் தான் தேவனுடைய குமாரன் என்று சொன்னதை நிலைநிறுத்துகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்** மேலும் இது இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளும் மற்றவர்களை இணங்கச் செய்வதில்லை, ஆல்ரைட்? அவர்களுக்கு உண்டாகும் அபிப்பிராயங்களைப் பொறுத்து அவர்கள் இந்த உண்மைகளை பார்க்கிறார்கள், அதைத்தான் நம்முடைய அடுத்த நிகழ்ச்சியில் பார்க்க இருக்கிறோம். நம்முடைய நேயர்கள் இந்த 5 உண்மைகளின் வெளிச்சத்தில் மற்றவர்கள் எப்படி பார்க்கிறார்கள் என கூறும் கருத்துக்களை கேட்க விரும்புகிறோம், ஆல்ரைட். இதை நாங்கள் நம்பவில்லை. இந்த உண்மைகள் சரிதான் ஆனால் உயர்ந்தவையல்ல. அதை நாம் அடுத்த வாரம் ஆய்வு செய்திடலாம். எனவே, நீங்களும், எங்களோடு இணைந்திடுவீர்கள் என நம்புகிறோம்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.